## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### சுருக்கம்

த.கு.வ.வாரியம் – திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெல்காட்டும் செவல் கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் உத்தேச மதிப்பீடு – ஆட்சி ஒப்புதல் – வழங்குதல்– சம்பந்தமாக.

---

வாரிய ஆணை எண்: 372 நாள் 4.12.96

பார்வை:

வாரியத் தீர்மான எண்: 15/நாள் 26.11.96.

**ஆணை:**

தலைமைப் பொறியாளர், தெற்கு மண்டலம், மதுரை அவர்கள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நெல்காட்டும்செவல் கிராமத்திற்கு குடிநீர் வழங்க உத்தேச மதிப்பீடு ரூ.26.85 இலட்சங்களுக்கு அமைக்கவும் மற்றும் ரூ.1.23 இலட்சங்களுக்கு ஆண்டு பராமரிப்பிற்கும் வரைவடிவு திட்டம் தயாரித்துள்ளார்.

மேற்கண்ட நெல்காட்டும்செவல் கிராமக் குடிநீர்த் திட்ட மதிப்பீட்டை தலைமைப் பொறியாளர், தெற்கு மண்டலம், மதுரை அவர்கள் 24.10.96 அன்று நடந்த தொழில் நுட்ப குழு கூட்டத்தின் ஒப்புதலுக்காக வைத்தார். தொழில் நுட்பக் குழுமம் இத்திட்டத்தை நன்கு பரிசீலித்து வாரியத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்தது.

தொழில் நுட்ப குழுமத்தால் பரிந்துரை செய்யப்பட்ட நெல்காட்டும் செவல் கிராமக் குடிநீர்த் திட்டம் 26.11.96 அன்று நடந்த வாரியக் குழு கூட்டத்தில் வாரியத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டது.

வாரியத்தில் கவனமான பரிசீலனைக்கு பிறகு திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த நெல்காட்டும்செவல் கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் உத்தேச மதிப்பீட்டை ரூ.26.85 இலட்சங்களுக்கு நிறுவவும் மற்றும் ரூ.1.23 இலட்சங்களுக்கு ஆண்டு பராமரிப்பிற்கும் தனிநபர் வீத மதிப்பீடு 803/- எனவும் 1000 லிட்டர் மதிப்பீடு ரூ.8.56 எனவும் ஆட்சி ஒப்புதல் அளிக்க தீர்மானித்தது.

இதன்படி வாரியம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த நெல்காட்டும்செவல் கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ.26.85 இலட்சங்களுக்கு நிறுவவும் ரூ.1.23 இலட்சங்களுக்கு ஆண்டு பராமரிப்பிற்கும் தனிநபர் மதிப்பீடு ரூ.803/-எனவும் 1000 லிட்டர் மதிப்பீடு 88.56 எனவும் ஆட்சி ஒப்புதல் அளிக்கிறது. மேலும் இத்திட்டத்தை துரிதப்படுத்தப்பட்ட ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் செயல்படுத்தவும் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டபின் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாரிய உத்தரவுபடி அனுப்பப்படுகிறது.

(ஒம்) எல். பழமலை,
மேலாண்மை இயக்குநர்,
த.கு.வ.வாரியம், சென்னை-5.

பெறுநர்
தலைமைப் பொறியாளர், தென்மண்டலம், மதுரை.

நகல்: 1) அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும்/த.கு.வ.வாரியம்
2) மேற்பார்வைப் பொறியாளர்/தி.க.வட்டம்/திருநெல்வேலி.
3) நிர்வாகப் பொறியாளர்/திட்ட. உருவாக்கக் கோட்டம்/ஊரகக் கோட்டம்/திருநெல்வேலி
4) இ.த.பொ (நிதி)/தலைமை அலுவலகம்/சென்னை-5.
5) [illegible]